வரியை நீக்கக்கோரி இன்றைக்குப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிற பனியன் தொழிற்சாலைகளுடைய அந்த ஊழியர்களுக்கு, நிச்சயமாக நல்ல நடவடிக்கையை எடுப்பதற்கு அனைத்திலும் உறுதியாக துணை நிற்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. கவன ஈர்ப்பு

தர்மபுரி, ஒசூர், பாலக்கோடு வழக்கறிஞர்கள் காலவரையறையின்றி நீதிமன்றங்களைப் புறக்கணிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் பெ. பொன்னுசாமி, கே.ஏ. மனோகரன், மு. வெங்கடராம ரெட்டி ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு சட்டத் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. கே.ஏ. மனோகரன்.

திரு. கே.ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, ஓசூர், பாலக்கோடு வழக்கறிஞர்கள், காலவரையின்றி, நீதிமன்றங்களைப் புறக்கணிப்பது குறித்து", மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து, ஒரு விளக்க அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிக்கை

சென்னை உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையின்படி, மாநிலத்தில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத இடங்களில் உள்ள 43 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களை உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களாக மூன்றாண்டு கால கட்டத்தில் முறையே, 1994-95-ம் ஆண்டில் 15 நீதிமன்றங்களும், 1995-96-ம் ஆண்டில் 14 நீதிமன்றங்களும், 1996-97-ம் ஆண்டில் 14 நீதிமன்றங்களும் மாற்றி அமைக்க அரசு தமது ஆணை எண் 1426, உள்துறை, நாள்: 23-11-1994-ல் ஆணைகள் வெளியிட்டுள்ளது. இவற்றில் 1994-95-ம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்ட 15 நீதிமன்றங்களில்

தர்மபுரி மாவட்டம், பாலக்கோட்டில் உள்ள குற்றவியல் நீதிமன்றத்தை உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றமாக மாற்றும் செயற்குறிப்பும் ஒன்றாகும். இங்ஙனம் மாற்றியமைக்கப்பட்ட பாலக்கோடு உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகார எல்லையை சென்னை உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையின்படி நிர்ணயித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

குறிப்பிலுள்ள பாலக்கோடு உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற எல்லை தர்மபுரி சார்பு நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டதாக முன்பு இருந்தது. ஆயின் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களாக மாற்றியமைத்து ஆணைகள் வெளியிட்டபொழுது சென்னை உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைக்கு ஏற்ப பாலக்கோடு நீதிமன்றம் தர்மபுரி சார்பு நீதிமன்றத்திற்குப் பதிலாக கிருஷ்ணகிரி சார்பு நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டுச் செயல்படும் என ஆணைகள் வெளியிடப்பட்டன. மேற்படி மாற்றம் குறித்தும் பாலக்கோடு நீதிமன்றம் தர்மபுரி சார்பு நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து தர்மபுரி மற்றும் பாலக்கோடு வழக்கறிஞர்கள் சங்கம் நீதிமன்றங்கள் புறக்கணிப்பு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. பாலக்கோடு மற்றும் தர்மபுரி வழக்கறிஞர்கள் சங்கம் விடுத்துள்ள கோரிக்கைகளை பரிசீலித்து இங்ஙனம் பாலக்கோடு நீதிமன்றத்தை கிருஷ்ணகிரி சார்பு நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் செயல்படும் என்ற நிலையினை மாற்றி, முன்பு இருந்தது போல் பாலக்கோடு நீதிமன்ற பகுதி தர்மபுரி சார்பு நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டு செயல்படலாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் அரசிற்கு அண்மையில் பரிந்துரை செய்தது. உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையை ஏற்று பாலக்கோடு நீதிமன்றம் தர்மபுரி சார்பு நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு செயல்படும் என்று ஆணை எண். 422, உள்துறை, நாள்: 16-3-1995-ல் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இம்மாற்றத்திற்கான அறிவிக்கை தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் நாள் 16-3-1995-ல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் தர்மபுரி மாவட்டம் ஓசூரில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து ஓசூர் மற்றும் தென்கனிக்கோட்டை வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் தற்பொழுது இரண்டு சார்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் ஒரு சார்பு நீதிமன்றம் ஓசூரில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்துரு நிதிப் பற்றாக்குறையினால் அரசினால் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கறிஞர்கள் சங்கங்களின் நீதிமன்ற புறக்கணிப்பினால் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை என தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

திரு. கே.ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே, ஒசூரில் சார்பு நீதிமன்றம் அமைக்கவேண்டுமென்ற கோரிக்கைக்காக, ஒசூர் மற்றும் தென்கனிக்கோட்டையைச் சேர்ந்த வழக்கறிஞர்கள், நீதிமன்றப் புறக்கணிப்புச் செய்து வருகிறார்கள். அங்கே தற்சமயம் 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கூடுதல் நீதிமன்றக் கட்டிடம் கட்டப்பட்டு வருகின்றது. ஆகவே, அதற்காக தனியாக நிதி தேவையில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்த ஆண்டிலேயோ அல்லது வரக்கூடிய காலகட்டத்திலேயோ அங்கே ஒரு சிறப்பு நீதிமன்றம் கட்ட, இந்த அரசு முன்வருமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஒசூரில் சார்பு நீதிமன்றம் அமைக்கின்ற கோரிக்கையினுடைய அடிப்படையில், அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை வைத்து, அதனை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. வெங்கடராம ரெட்டி.

பிற்பகல் 12-10

Thiru M. VENKATARAMA REDDY : Hon. Speaker sir, with regard to the reply, when I went through the reply given by the Hon. Law Minister I found that with regard to Dharmapuri Court, a G.O. has been passed on 16-3-1995. There the Advocates have withdrawn the strike. Now the question is the establishment of a Sub-court at Hosur. The Hon. Minister has given two reasons in the way of establishment of a Sub-court at Hosur. One is paucity of funds. Another is, there is no law and order situation. Of course there is no law and order situation as the strike is called by the Advocates, who are graduates. Already the High Court has forwarded, more than 6 months ago, requesting this Government to establish a sub-court taking into consideration the industrial area and also the surrounding areas of Hosur where the value of the land has gone up - even a cent of land costs more than 50,000 rupees and evey litigant has to go upto Krishnagiri, because the jurisdiction of a district munsif

court is only 15,000 rupees. The litigant public from far away places like Hoganekkal and Karnataka border which are nearly 120 miles to 130 miles away have to go to Krishnagiri. This is one aspect. Secondly, more than 65% of the pending cases are only Appellate cases. Besides these, there are Original side cases, cases relating to acquisition of lands, accident cases known as MACT OP cases, cases under Section 307 IPC, etc. pending before the Sub-Court at Krishnagiri. Nearly 60% of these cases are Appellate cases from the Denkanikottai and Hosur Courts.

Hon. SPEAKER : You can only ask for one or two clarifications in the form of a question.

Thiru M. VENKATARAMA REDDY : The Pilot Project scheme has been implemented in Dharmapuri only to see that the arrears of cases are cleared. But, thousands of cases are pending. Even cases claiming maintenance amount are pending for nearly 15 years. This situation should be set right and disposal of cases should be ensured. The old adage is 'Justice delayed is justice denied'. At the same time, justice hurried may also become justice buried. The establishment of a Sub-Court at Hosur will also help the new project that has been launched by the Hon. Chief Minister for Dharmapuri district. Hence, I request the Hon. the Law Minister to come forward to establish the Sub-Court at Hosur, as per directions of the High Court. One of the reasons cited by the Hon. Minister is paucity of funds. But, the construction of a building for the Sub-Court at a cost of Rs.85 lakhs has already been sanctioned. The work is progressing and the building will be ready in another two months. Only the appointment of a Presiding Officer for the court has to be done. The work of the Court can be managed, initially, by having a skeleton staff of two or three persons drawn from the District Munsif Court. The same can be done for the post of Central Nazir also. What is important is that the burden should be reduced and delay avoided. Hence, I request the Hon. Minister to come forward to establish a Sub-Court there, so that the needs of the people can be met.

Sir, I have one more request. I thank the Hon. the Chief Minister and the Hon. the Law Minister for having established a District Munsif Court at Denkanikottai in 1993. But, that Court has got only Civil jurisdiction. The Policy of the Government is to vest the Court with both Criminal and Civil jurisdiction. I have already made representations to the Hon. the

Law Minister to invest the same Judge with both Criminal and Civil jurisdiction, so that it can be of help to the litigant-public. So far as the Forest cases are concerned, they can be tried by the District Munsif at Denkanikottai.

*மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஓசூரிலே சப்-கோர்ட் அமைப்பதைப் பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இருவேறு கருத்துக்கள் கிடையாது. ஆனால், தற்போது அது தள்ளிவைக்கப்பட்டு இருக்கிறதே தவிர, அது மறுக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த உணர்வுகளை எல்லாம் வைத்து நிச்சயமாக மறுபரிசீலனை செய்யப்படும். அதே நேரத்தில் தர்மபுரிக்கு 4 ஆண்டுகளில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகுதான், நீங்கள் சொன்னதுபோல, உங்களைத் தேர்ந்தெடுத்த சட்டப்பேரவைத் தொகுதியிலே அமைந்துள்ள தென்கனிக்கோட்டையிலே ஜூடிஷியல் மாஜிஸ்டிரேட் கோர்ட் வந்தது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கிற 8 மாவட்டங்களில் தர்மபுரி மாவட்டத்தையும் ஒரு பைலட் ஸ்கீமிலே சேர்த்து, அதனைத் துரிதப்படுத்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆக, நீங்கள் சொன்ன அந்த உணர்வுகளை மனதிலே வைத்துக்கொண்டு உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு, திரு. இரா. அப்பு நடேசன், இருக்கையில் இல்லை.

7. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. இராம. இராமநாதன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமையும் சிறப்புமிக்க மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அமர்ந்துள்ள இந்த மாமன்றத்தில் 1994-95 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 226 மற்றும் 227-வது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.